சிவமயம்

# இந்துசாதனம்

சைவ பரிபாலன சபை வெளியீடு. பிரதி விலை: சதம் 20

ஆரம்பம்: விரோதி வூ (1889) ஆவணிமீ 28-ம் வ அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அஎ] யாழ்ப்பாணம்: இராக்ஷத வூ ஐப்பசிமீ எ-உ வெள்ளிக்கிழமை (24-10-1975) [இல: உசு

## வேத வேள்விக்கு கலி காலத்தில் இடமில்லை!



### பலி நிறுத்த அவசியம்பற்றி பண்டிதமணி அவர்கள்

[ஆலயங்கள் சிலவற்றில் நிகழ்ந்துவரும் உயிர்ப் பலி வழக்கத்தை நிறுத்த உழைக்கும் பிரசார சபையினர் திருநெல்வேலி கலைச் சோலையில் பண்டிதமணியவர்களது ஆசி பெறச் சென்ற அமையம் பலி ஒழிப்புப்பற்றி அவர்கள் வெளியிட்ட கருத்து.]

வேத வேள்வி நிந்திக்கத் தக்கதன்று.

"புன்மையாம் பசுத்தடிந்து புரையில் வேள்வி ஆற்றியே
தொன்மைபோ லெழுப்புமாறு
சுருதி சொற்றவாறு"

என்பது கந்த புராணம்.

இறந்தவைகளை எழுப்ப வல்லவர்களே வேத வேள்வி செய்ய வல்லவர்கள்.

உயிரை உயர்நிலை செய்து, உடலை உடையாரிடம் ஒப்பிப்பதே வேத வேள்வி.

வேத வேள்விக்குக் கலிகாலத்தில் இடமில்லை.

சென்ற நூற்றாண்டில் சிதம்பரத்தில் தீக்ஷிதர்கள் தொடங்கியதொரு வேள்வியை ஆறுமுக நாவலர் பெருங் கிளர்ச்சி செய்து தடுத்துவிட்டார். அவ்வாறே நல்லூரிலும் நாவலரால் ஆடு வெட்டுத் தடுக்கப்பட்டது.

இக்கால வேள்வி கோயிலை அசுசிப்படுத்தி பிராணிகளை வதைத்துப் பழி பாவங்களைத் தேடிக் கொள்வதாயே முடியும்.

— — —

## அருணகிரிநாதர் 600வது ஆண்டு நிறைவு விழா

—0—

மேற்படி விழா நவம்பர் மாதம் 7, 8, 9 ம் திகதிகளில் நடைபெற விருந்தது இன்னாட்கள் கந்த சஷ்டி விரததினத்துக்குள் அமைவதால் அடியார்கட்கு சிரமம் ஏற்படும் என்பதால் விழா பின் போடப்பட்டுள்ளதாகவும் மாநாட்டின் மறுதிகதிகள விரைவில் அறிவிக்கப்படுமெனவும் மேற்படி விழாக்குழுவின் அமைப்பாளரான திரு மயில் அமிர்தலிங்கம் விழாக்குழுவின் சார்பில் அறிவித்துள்ளார். ——

## ஆணவ இருள் அற்றுப்போக அறம் ஆற்றுந் திருநாள்

'தீபாவலி' என்ற சொல் சிறப்பையுணர்த்தும் ஓர் சிறப்புச் சொல்லாகத் தமிழகத்தில் வழங்கி வருகின்றது.

புராணப் பொருளை ஆய்ந்துணரும்பொழுது சைவ சித்தாந்தத் தத்துவத்தின் சிறப்பமைந்த நிகழ்ச்சியை இந் நாள் குறிக்கின்றதை நாம் காண்கின்றோம்.

'புதியன புகுதல் பழையன கழிதல் வழுவல கால வகையினானே' என்ற பொது மொழிக்கிணங்க புத்தாண்டுப் பொலிவுடன் தீபாவலித்தினத்தில் மக்கள் நீராடிப் புனிதராகிப் புண்ணியன் கோயிலுக்கு புதிய ஆடை அணிந்து பூக்கை கொண்டு சென்று போற்றி வருதலும் திபங்களை வரிசையாக அமைத்து ஒளிச் சிறப்புச் செய்தலும் மரபு வழக்கம். இந்த நிகழ்ச்சிகள் எல்லாம் ஆக்க அலுவல்கள்.

ஆனால் இக்காலத்தில் அவற்றைவிட்டுச் சிலர் மது நீராடி மாமிசத்தைத் தமக்குப் படைத்து மானம் அற்றுப் போகும் வகையில் வீதி தோறும் நின்று கூத்தாடுவதை என் சொல்வது? ஆடும் கோழியும் வாடி வதங்கும் நாள் தீபாவலியென்று தீயவர்கள் சிந்தனையிற் படுவது கலிகாலக் கோலமேயாம். அசுரரின் அகங்காரத்தை அடக்கிய அவதாரங்களின் சிவகாருண்ய நிகழ்ச்சியை நினைவு கூரும் நெறியான நாட்களில் முறைகேடாகாமற் சைவமக்கள் வாழச் சைவ சங்கங்கள் ஆவன செய்தல் வேண்டும்.

பண்டிதமணி அவர்கள் கருத்துப் பொதிந்த கட்டுரையில் வேள்வியை மிக நுட்பமாக விளக்கியிருக்கின்றனர். வேள்வியெங்கே. இக்கால வீணர்களின் விபரீதப் படுகொலை எங்கே!

தீபாவலி தீபாவலியாக இருக்கட்டும்!

கந்தசுவாமியாரின் திருவிளையாடல்களைக் கந்தபுராணமூலம் படித்து நோன்பிருந்து விரதங் காப்பதற்கு முன் நிகழும் தீபாவலி எத்துணைச் சுத்த தினமாயிருத்தல் வேண்டும்?

## பரீட்சை

—o—

சைவ பரிபாலன சபை நடாத்தும் சமய பாடப் பரீட்சை 9-11-75 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

## சமய அறிவுப்போட்டி

வழக்கம்பரை சன சமூக நிலையத்தினர் ஆண்டுதோறும் நடாத்தி வரும் சமய அறிவுப் போட்டியின் அடுத்த தொடர் 5-11-75 அன்று முடிவடைகின்றது. இப் போட்டியில் சகலரும் கலந்து கொள்ளலாம்.

———

உணவுச் சுத்தத்தை

## ஒவ்வொருவரும் பேணுதல் கடமை

—0—

முற்றாக ஒரு குடும்பம் உணவில் அசுத்தத்தாற் பாதிக்கப்பட்டிருப்பதாகச் செய்தி வெளிவந்திருப்பதைப் பார்க்கும்பொழுது மக்களின் தேகாரோக்கியம் எவ்வளவு தூரம் ஆபத்துக்குள்ளாக்கப்பட்டிருக்கின்றதென்பதை அரசினரும் ஏனையோரும் உற்று நோக்குதல் வேண்டும்.

உடல் நலத்துக்கு உணவுச் சுத்தம் இன்றியமையாதது. சருக்கரை, சீனி, பால், தயிர் மோர் முதலியனவும் பலகார வகைகளும் யாவும் கலப்பினாலே தரம் குறைந்தனவாக மட்டுமல்ல ஆரோக்கியத்துக் கொகாதனவாகவும் இருக்கின்றன. இதைத் தடுக்கச் சட்டம் உண்டு. ஆனால் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறதா? ——

## கந்தசட்டி விரதம்

ஐப்பசிமீ 18 - (4-11-75) செவ்வாய்க்கிழமை கந்தசட்டி விரதாரம்பம்.

## வாரியார் வழங்கியவை

[தொகுப்பு: எஸ். கே. சிவபாலன்]

கடவுள் தயவு நமக்கிருந்தால் சகுனமும் தடையும் என்ன செய்யும்? ஆகவே கடவுளின் கருணையைப்பெற வழி தேடு.

மரண சமயத்தில் என்ன எண்ணம் தோன்றுகிறதோ அதுபோலத்தான் மறுபிறவி வாய்க்கும் அதற்காகத்தான் இப்பொதிருந்தே பக்தி ஜெபம் தியானம் எல்லாம் செய்துபழகவேண்டும்.

மாநகராட்சி அலுவலகத்தில் நெருப்பு அணைக்கும் மோட்டார் தயாராக இருக்கிறது. யார் வீட்டிலாவது நெருப்புப் பிடித்து விட்டால் உடனே நகராட்சி அலுவலகத்திற்கு தெரியப்படுத்தினால் உடனே மோட்டார் வந்து நெருப்பை அணைத்துவிடும் அதுபோல் கடவுள் நம்முடைய துன்பத்தை யெல்லாம் துடைக்கத் தயாராக இருக்கின்றார் நீங்கள் அவரை அன்புடன் மனம் கசிந்து நினையுங்கள் வருவார்.

பால் கறக்கும் மாடு நமதாக இருந்தாலும் கன்றுக் குட்டியைப் பிடித்துக் கொண்டு போனால் தான் பால் கறக்க முடியும் இல்லையேல் பால் கிடைக்காது அதுபோல் அடியார்களின் துணை பற்றிப் போனால் தான் ஆண்டவனுடைய அருளைப்பெற முடியும்

பெரிய அதிகாரிகள் தயவு இருந்தால் சிப்பந்திகள் நம்மை என்ன செய்ய முடியும அதுபோல் கடவுளைப் பின்பற்றுபவர்களுக்கு எல்லாவினைகளும் அஞ்சும்

புகைபிடிப்பதற்கும் ஒழுங்கீனமான பேச்சுக்கள் பேசவும் வெட்கப்பட வேண்டுமே தவிர வீபூதி பூசவும், தெய்வ வழிபாடு செய்யவுமா வெட்கப்படுவது?

கடவுள் தந்த உணவை அவருக்கு நிவேதனம் செய்யாமல் உண்டவன், பத்து வருடத்தில் பன்னிரண்டு பிள்ளைகள் பிறக்கும் வீட்டில் பிறந்து அல்லல் படுவான்,

நாம் செய்ய நினைக்கும் இரகசியமான குற்றத்தையும் நமக்குள்ளே இருக்கும் கடவுள் அறிந்து கொண்டே இருக்கிறார்.

———

# சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்க தண்புனல்
வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையக முந் துயர்தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# 'இந்து சாதனம்

இராக்ஷத ஹூ ஐப்பசி மீ எ-உ வெள்ளி

## கஸ்தூரிபாய் நிலையம் காப்பது மக்கள் கடமை

ஆதரவற்றவர்களுக்கு அன்னம் அளிப்பது அரியதோர் அறம். உண்ண உணவின்றி யிருப்பவர்கள் உடுக்கையுமின்றி உறங்குவதற்கோ ரிடமும் இல்லா திருக்கும் நிலைமை சமுகத்துக்குரிய பெரும் பிரச்சினையாகும். உற்றார் உறவினர் இருப்பார்களே அவர்களல்லவா இவர்களுக்கு ஆதரவு நல்க வேண்டியவர்கள் என்று கூறுவாருமுளர். சுற்றமும் தோழமையும் தனிப்பட்ட தொடர்பு. ஆனல் மக்கள் சமுகமோ பெருந் தொடர்பு.

தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர் என்ற பண்பு தமிழகப் பழைமையை விளக்குவது; அன்பின் அடிப்படையில் அமைந்தவிப் பண்பு மக்கள் குலத்தை மகிமையாக வைக்கும் சால்புடைத்து. ஆகவே அனதைகளுக்கு — ஆதரவற்றவர்களுக்கு ஊணும், உடையும் உறங்கும் நிலையமும் உதவுவது பொது மக்களின் கடமை என்பதை யாவருமறிவர்

இந் நாட்டிலே ஆதரவற்றவர்களுக்குரிய நிலயங்கள் சில உள. திருநெல்வேலியிலே சைவ அனதசாலை சைவ வித்தியா விருத்திச் சங்கத்தால் நிறுவப்பெற்று நெடுங்காலம் இயங்கி வருகின்றது. உத்தம குறிக்கோளை உடைய இந்த நிலயத்தைச் சைவ மக்கள் ஆதரிப்பது தலையாய கடன். அதேபோன்று கைதடி நிலயமும் பாராட்டுக்குரியது.

பெண்களுக்குப் பிரத்தியேகமாகக் கஸ்தூரிபாய் நிலயம் காநதி மகாத்மாவின் உயர்ந்த கொள்கைகளுக்கமைய நிறுவப்பெறுவது பொருத்தமான நிகழ்ச்சியென்று நாம் உபசரிக்கின்றேம், நிலயத்திலே நிலயற்றவர்களுக்குதவி அளித்தல் ஒன்று. ஆதரவு பெறுவோர் சமுகத்துக்கு ஆதரவு கொடுப்பது மற்றென்று. இவ் விரு தொண்டுகளும செவ்வனே இயங்கிப் பயனுய் வருவது நாட்டின் நலமே. இப் பணிகள் எழில்பெற அமைய உதவும் அன்பர்கள் யாவரும் பாராட்டுக்குரியோராவர்.

## வாழ்க்கையிற் சாயய்

[ பெரியபுலம் மெ. மி. பாடசாலையில் அண்மையிலாற்றிய சொற்பொழிவின் சாரம் ]

— திரு. ஷண்முக. குமரேசன் —

ஏசுநாதரைச் சிலுவையில் அறைந்தனர், அப்பொழுது அவர் அம்மக்களைத் திட்டவில்லை. ஒரு சிறுபிள்ளை சிறு தவறு செய்தால நாம் அப்பிள்ளையைக் கொடுமைப்படுத்துவதில்லை; அது தெரியாமற் செய்துவிட்டது என்கிறேம். இவர்கள் தெரியாமற் செய்யும் பிழையை மன்னியுங்கள் என்று ஏசுநாதர் இறைவனை வேண்டினுர் என்று அறிகின்றேம் அன்பெனனும் பண்பு அவரிடமிருந்தபடியால் அப்படிவேண்டினர். அன்புக்குப்புறமான சமயம் ஒன்றில்லை வாழ்க்கையில் நாம் அன்பைப் பேணினல் நாம் சமய வாழ்வு வாழ வழியுண்டு புத்தரும் பிற உயிர்களிடத்தில் அன்பு காட்டினர்.

இல்லாமிய மக்கள் சகோதரத்துவத்தைக் கடைப்பிடிக்கின்றனர். அன்பு இல்லினலே தான் சகோதரத்துவம் உண்டு இத்தகைய குணத்தை விளக்கி வாழ்ந்து காட்டினர் சுவாமி விவேகானந்தர் அன்பே சிவம் என்றார் திருமூலர்

பல அடியார்கள் நடை உடை பாவனை ஆகியவற்றிற சமயத்தைக் கைக்கொண்டனர் பசித்து வந்த சிவனடியாருக்கு அமுது படைத்து க[illegible] த்தமில்லாமையாற் [illegible]

நாவலர் பிள்ளைத் தமிழ்.
அநுபந்தம் 2.

## நால்வர் நிழலில் நாவலர்

— "பழைய பாணி" —

நால்வர் பெருமக்களின் உணர்வொழுக்க சீலங்களின் சாயை போன்றமைந்துள்ளவை நாவலரின் உணர்வொழுக்க சீலங்கள். அவை நால்வர் மகிமை பற்றிய நமுணர்வு நிலைக்கு மேலும் ஒளியூட்டுவனவாயிருக்கும்.

பாண்டி நாட்டிலே சைவத்துக்கு நிகழ்ந்த பழி கேட்டபோது, வேதாரணியத்திலிருந்த சம்பந்தர் அப்பர் மேல ஆணையிட்டுக் கொண்டெழுந்த நிகழ்ச்சி அவர் வாழ்க்கைத் தத்துவத்தின் ஆணி வேரெனற்பாலது நம் நாட்டுச் சைவ உண்மைக்கும் ஒழுகலாற்றுக்கும் இடையூறு மிகவும் விளைக்கப்படுமாற்றைத் தாம் நிதர்சனமாகக் கண்டபோது, மத்திய கல்லூரியிலிருந்த நாவலர்க்கு எழுந்த உத்வேகத்திலும் ஊக்கத்திலும் அன்றைய சம்பந்தரின் உள்ள நிலைச் சாயல் பிரதிபலிப்பதைத் தெட்டத் தெளியக் காண்கின்றேம்.

சைவத்தை மட்டுமல்ல, தமிழையுமே கூனச்செய்துவிட்டிருந்தது சமணம அத்திணையென்றல் அதற்கு அருவருப்பு நாடகம், இசை என்றல் அதற்குக் கண்டு மூட்டும் கேட்டு மூட்டும். இம்மூன்றையும் ஒழித்து விட முழுமூச்சாகவே சமணர் முயன்றுர்கள் திங்கிலையில் தமிழ் நிமிர்ந்து நிற்க வகையேது. இவற்றேடு பாண்டியன் கூனுமொன்று. மூன்று கூனையும் ஒரு கூனுகவே நிமிர்த்திவிட்ட பிரபாவம் சம்பந்தர் பிரபாவமே சம்பந்தர் தலையீட்டால் இயலிசை நாடகங்களும் மீண்டும் தலையெடுத்தன.

நம் நாட்டிலும் அன்று சைவம் மட்டுமல்ல தமிழ்க் கல்வியும் திசை திருப்பப்பட்டேயிருந்தது. சைவகலாசார பாரம்பரியமான கருத்துகளுக்கு வாய்ப்பளிக்காத முறையிற் பாடபோதனை நிழுவப்பட்டது அச்சார்பில விபரீத பேர்தலைகளும் இடம்பெருமல் விடவில்லை இந்நிலையை உற்றுணர்ந்த நாவலர் சைவப்பணி மட்டிலல்ல தமிழ்க் கல்விப் பணியிலும் தம்மைத் தீவிரமாக ஈடுபடுத்திக் கொண்டார்.

அப்பர் சுவாமிகளின் சிரத்தையன்புக்கும் வீடாப்பிடியான ஊக்கத்துக்கும் உரைகல்லாகத் திகழ்வது அவர் தம் கையைத்திரை நிகழ்ச்சி கால் போகட்டும், கைபோகட்டும் வேண்டுமானுல் உயிரே போகினும் போகட்டும். அதாவது எந்த இடையூறெனக்கு வருகினும் வரட்டும். சிவபெருமானுடைய கயிலைக் கொலுவைக் கண்டன்றி மீளேன் என்றிருந்தது அப்பர் திருவுள்ளம்.

என்னை இலக்காகக் கொண்டிருக்கும் மடியோ இனப்பகையோ அடலார் சூழ்ச்சிகளோ எதுவரினும் வருக அவற்றல் யான் உயிரிழக்குங் கட்டம் வரினும் வரட்டும். சைவத்தை அதன் யதாஸ்தானத்தில் கொலுவிருக்க வைத்துக் கண்டன்றி யான் ஓயமாட்டேன் என்றிருந்த நாவலர் உணர்வுப் பொறியில் அப்பர் உணர்வுப் பிரகாசம் விட்டொளிர்கின்றது.

சிவனே தாதா அவனே கொடுக்கவேண்டும் கேட்கில் அவனையே கேரிற் கேட்டு கொள்ளவேண்டும் என்பது சுந்தரர் திருவுளச் சீர், மணிதொண்ட, என்னும் விண்ணப்பமுரைசுத கட்டத்தில் இந்த நாவலர் பத்திமையிலும் அந்த நாவலர் கோன் பத்திமையே பரிமளிக்கக் காணலாம்.

அரிமர்த்தன பாண்டியன் மாணிக்கவாசகரைத் தனக்கு மந்திரியாகத் தகுதி கண்டு தேர்ந்தெடுத்தான். அரசன் வழி மந்திரி அமையவேண்டியதிலைக்கு எதிர்மாருக மந்திரி வழி அரசனும் சிவனடியாருக மாறும் நிலை ஏற்பட்டுவிடுகிறது பேர்சிவல் என்ற கல்லூரிபதிபர் நாவலரைத் தம கல்லூரி ஆசிரியனுகத் தரங்கண்டு தாமாகவே நியமித்தார். அவர் திறமை நலங் கண்டு தமது முக்கிய பணிகள் சிலவற்றுக்கும் அவரைப் பயன்படுத்தினுர். அவரை முற்றுகத் தம்வசப் படுத்தி அவ்வகையால் அநுகூலமாகக் கூடிய மேன்மைகளை அவருக்கு வழங்க, பார்சிவல் கருதாமலிருந்திருக்க முடியாது ஆனல் நிலைமை நேர் மாருயிற்று பார்சிவலே தம்மை நாவலர் சிஷன் என்ற நிலையில் வைத்துக் கொள்வதில் திருப்திப் பட்டுவிட்டார் டலர் முன்னிலையில் பார்சிவல் நாவலரை மமகுரு எனக் கூறி மரியாதை செய்துள்ளமை சரித்திர உண்மையாகும்,

இவ்வகையல் நால்வர் நிழலில் நாவலர் விளங்குதல் கணகூடு,

அனுப்பிய மாங்கனிகளுள் ஒன்றை மனைவி கொடுத்தார் விருந்தோம்பலிற் சைவம் (சமயம்) பெறுமிடத்தை இங்கேஉணருகின்றேம்.

பல்லாண்டுகளாக எமது நாட்டிலும் வேறுசில நாடுகளிலும் பிறநாட்டுக் கத்தோலிக்க கன்னியர் மருத்துவமனைகளிற் பணியாற்றினர் சேவை செய்வதில் இன்பங்கண்டனர் அவர்கள் நாடு, மொழி, இனம், சமயம், இவற்றல்வேறுபட்டமக்களுக்கு உதவி புரிந்த அவர்கள நோயாளிகளோடு அன்பாகப் பேசி அ[illegible] தில் அவர்[illegible] மக்களுக்

(வளர்ச்சி 3-ஆம் பக்கம்)

அணிந்துரை அரங்கம்

## "பயன் தரும் பண்ணிசை"

பண்ணிசைப் புலவர்
எஸ். கே. சிவபாலன்

பயன் தரும் வெளியீடுகளுள் ஒன்றுகும் இத்தொகுப்பு எவ்வாறு பயனுடைத்து என்பதை ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகளும் ஸ்ரீமத் ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகளும் — 'திருமுறைப் பணி நலம் பொலிய' என்று வழங்கிய நல்லாசியி லிருந்தும் நல்லை. திருஞான சம்பந்தர் ஆதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத ஸ்ரீ ஞானசம்பந்த தேசிகபரமாசாரிய சுவாமிகள் "சைவ உலகத்திற்குப் பயன் தரும்முயற்சி' என்றுரைத்த வாழ்த்தும், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் "மிக்க பயன் தரும் பண்ணிசைப் பெருநிதியம்" என்று மகிழ்ந் துதவிய மதிப்பும் முறறுக விளக்குகின்றன. "தேவாரத் தேனை நாவாரப் பாட நனி யீந்தான்" என மகரிஷி சுத்தானந்த பாரதியார் தொகுப்பாசிரியர் பத்திச் சுவையுடன் பாடும் வல்லமையை நேரில் இரசித்திருக்கின்றனர்

திருமுறைகள் தமிழகத்தின் பெரு செறிக் களஞ்சியம். ஆகவே தேவாரம திருவாசகம முதலிய அருட் பிரவாகததை எல்லோரும் பருக வைப்பது சிவப்பணி, மக்களுக்காற்றும் மகத்தான தொண்டு.

திருமுறைப் பண்ணிசைத் திறனுய்வுத் திறமை சாலப் பொருந்திய "திருமுறைச் செல்வ மணி" திரு. எஸ், கே. சிவபாலன் அவர்களின சீரிய முயற்சி சிறப்புடைத்தென்க.

இந் நூல் நல்லை ஆதீனத்திலும், ஸ்ரீ சண்முகநாதன் புத்தகசாலையிலும் பெற்றுக் கொள்ளலாம். பிரதியின் விலை ரூபா 4—50.

## இ மு வள்ளுவர் சங்கம்

### சமயப் பிரசாரமும் கூட்டுப் பிரார்த்தனையும்

சென்ற 19-10-75 ஞாயிற்றுக் கிழமை நிகழ்ந்த இ. மு, வள்ளுவர் சங்கத்தின் காரிய நிருவாக சபைக் கூட்டத்தில் பினவரும் தீர்மானம்நிறைவேற்றப்பெற்றது.

"இந்த இலங்கையில்; சமய நடை முறை மக்களிடையே குறைந்து கொண்டு போவதால்; சமய நம்பிக்கையை அதிகரிக்கச் செய்து நடை முறையில் இருக்கக்கூடிய முறையில் ஒவ்வொரு கிராமங்கள் தோறும் ஆலயங்களில் கூட்டுப் பிரார்த்தனை சமயச்சொற்பொழிவு ஆகியவைகளை ஆங்காங்குள்ள சங்கங்களுடன் இணைந்து நடத்திவாவேணடும் என தீர்மானிக்கப் பெற்றது.

இச் சங்கத்தின் சமயப்பிரசாரமும் கூட்டுப்பிராத்தனையும எதிர்வரும் வெள்ளிக்கிழமை (31-ம் ) மாலை யா ழ. நாயன்மார்கட்டு ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தில நிகழும. மேற்படி சங்கப் பொறுப்பாளர் திரு. முருகர் உல்லாசர் அவர்கள திருநாவுக்கரசு நாயனர் சரிதம்பற்றி இன்னிசை விரிவுரையாற்றுவார்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேக்கிழார் சுவாமிகள் கண்ட தமிழகமும் இல்லறமும்

[ செ. சின்னத்துரை இளைப்பாறிய ஆசிரியர் ]

(முன் வளர்ச்சி — 6)

கோட்புலி நாயனார் என்பவர் ஒருவர் உளர் அவர். அரசனின் சேனாபதி சிவபெருமானின் பூசைக்குரியதென்று ஒரு நெற்கூட்டைக் கட்டிப் போருக்குச் சென்றார் பஞ்சம் நாட்டில் வந்தது, அவரது சுற்றத்தார் பஞ்சம் வந்தபோது நெற்கூட்டை அவிழ்ந்து சோறாக்கி உண்டார்கள் கோட்புலியார் யுத்தத்திலிருந்து வந்தபோது நெற்கூட்டை சுற்றத்தார் அவிழ்த்து உண்டார்களென்று அறிந்து அவர்கள் எல்லோரையும் கொன்றார். பால்குடிக்கும் ஒரு தனிக்குழந்தை அன்னம் புசிக்கவில்லை அன்னத்தை உண்ட தாயின் பாலை உண்டதினல் அதற்குச் சிவ அபராதம் உண்டு என நினைந்து அதனையும் கொலை செய்தார்

"பின்னங்கு பிழைத்த
தொரு பிள்ளைத்தம்
மெயரான்
இவ்வன்னந்துய்திலது குடிக்
கொருபுதல்வன் அருளு
மௌன
இங்கெல்லுண்டாள் முலைப்
பால் உண்டதென எடுத்
தெறிந்து
பின்னர் வடிவா ளால் இரு
துணியாய் விழவேற்றார்"

என்பது சேக்கிழார் சுவாமிகள் வாக்கு.

அரிவாட்டாய நாயனார் தமக்கு உணவுக்கு ஒன்றுமில்லாமல் பசியால் வாடின போது அறுக்கும் நெல்லெல்லாம் செந்நெல்லாக வரக் கண்டு தாம் நினைத்தபடியே சிவபெருமானின் திருவமுதுக்குக் கொடுத்தார் வாய்மை என்னும் தலை சிறந்த பண்பில் உறைந்து நின்றார், சிவபெருமானுக்கு என்ற உறுதியில் மனம் திளைத்து நின்றார் இக் கதைகளை நாம் சிந்திக்க வேண்டும். கோயில் அதிகாரிகளும் மட அதிகாரிகளும் கோயிற் பூசகர்களும் தர்மச் சொத்தின் பொறுப்பாளிகளும் இதனை நன்கு சிந்தித்துச் சைவ நீதியோடு செயலாற்ற வேண்டும்'

சிவசொத்தைத் தம்பாவிப்புக்கு எடுப்போர் தொகை தற்காலத்தில் மிக அதிகம். இதனால் சைவ நீதி குன்றி மறம் தலை தூக்கும். அதனால் மழை இன்மை, பஞ்சம், நோய், யுத்தம் முதலியன விளையும் பிராமணர்களைப் பற்றிப் பற்பல இடங்களில் சேக்கிழார் சுவாமிகள் கூறியுள்ளார், பிராமண சமூகத்தவர்கள் எப்படி ஒழுகவேண்டுமென்பதனை சண்டேசுர நாயனார் புராணத்தில் கூறியுள்ளார்.

'செம்மை வெண்ணீற்றிஒரு
மையினர் இரண்டுபிறப்பின
சிறப்பினர்
மும்மைத் தழலோம்பியநெறியார்
நான்கு வேதமுறை பயின்றார்
தம்மை ஐந்து புலனும்பினசெல்
லும் தகையார் அறுதொழிலின்
மெய்ம்மை ஒழுக்கம் ஏழுலகம்
போற்றும மறையோர்
விளங்குவது"

மன அடக்கம் ஒருமைப்பாடுடையவர்களாய் பய பக்தியோடு விபூதி அணிபவர்களும் மூன்று வித அக்கினியைப் பொருள் உணர்ந்து வளர்ப்பவர்களும், நல்லாசான் மூலமாக முறையாக வேதங்களைப் பயின்றவர்களும வாழ்ந்தார்கள். ஐந்து புலன்களால் ஊசலாடும் மனதை நிறுத்தும ஆற்றல் பெற்ற உத்தமபிராமணர்களே திருச்செய்ஞலூரில் வாழ்ந்தார்கள்,

"வேதஉள் ளுறையாமுன்
வீரிபுனல் வேணிநாதர்
தம்மையும் அவரது அடியாரையும்
நயந்து பாதம் அர்ச்சனை புரிவ
து [illegible] என்றே
[illegible] இரண்டுமே
கருத்துடையார்"

இப்பாடல் திருநீலகக்கநாயனார் புராணத்தில் உள்ளது.

வேதங்களின் உட்பொருளை நன்குணர்ந்து, வேதம் ஓதியும் திருக்கோயிலில் இருக்கும் சிவலிங்க மேனி தன்னைச் சிவனெனவே கண்டு அதற்கு அகத்தும் புறத்தும் பூசை செய்து வழிபட்டார்கள். "மாலற நேயமும் மலிந்தவர் வேடமும் ஆலயந்தானும் அரன் எனத் தொழுமே" என்ற சிவஞான போதச் செய்யுளின்படி சிவனடியார்களைப் பேணியும் பூசித்தும் வாழ்ந்தார்கள். மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதற்கு சர்வ லோக நாயகராகிய சிவபெருமானின் திருவுலாவைக் கண்டு தரிசித்தலும் சிவனடியார்களைக் கண்டு தரிசித்தலும் அடியார்களுக்கு அமுதூட்டலும் சிவ்னடிக்கீழ் வைக்கும் சிறந்த மார்க்கமாகும். பிரபஞ்சமாகிய சேற்றில் அழுந்தாமல் புன்னெறியை அறுத்து நன்னெறியை வளர்க்கும் உயர்ந்த வழியுமாகும,

'மண்ணிற் பிறந்தார் பெறும்
பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார் தமை
அமுது செய்வித்தல்
கண்ணினலவர் அவர் நல்விழாப்
பொலிவு கண்டார்தல்
உண்மையாமெனில் உலகர்முன்
வருகென உரைத்தார்

மேலே கூறப்பட்ட உண்மையினை நினைந்து நாம் வையத்து வாழ்வாங்கு வாழ வேண்டும் சேக்கிழார் பெருமான் ஞானசம்பந்தப் பெருமான் புராணத்தில் கூறும் செய்யுளாகும், பூம்பாவையின் கதைத் தொடரில் இச்செய்யுள் உள்ளது வாழ்க்கைக்கு உறுதுணையாயிருப்பது ஒழுக்கம், அன்பு, ஆசாரம், வழுக்கிலாத தவம் முதலியனவாகும்.

"சீலமின்றி நோன்பின்றிச்
செறிவே இன்றி அறிவின்றி
தோலின்பாவைக் கூத்தாட்டாய்ச்
சுழன்று விழுந்து கிடப்பேனை
மாலுங் காட்டி வழி காட்டி
வாராவுலக நெறியேனுக்
கோலங் காட்டி ஆண்டானைக்
கொடியெனறே கூடுவதே"

என்று தேனினுமினிய திருவாசகத்தில் மணிவாசகப் பெருமான் கூறுகிறார் "தீய என்பன கனவிலும் நினைவிலாச் சிந்தைத் தூயமாந்தர் வாழ்தொண்நாடு என்கிறார் சேக்கிழார் சுவாமிகள் திருக்குறிப்புத் தொண்டர் புராணத்தில் தம்மை ஐந்து புலனும் பின் செல்லும் தகையார் என்று திருச்சேஞ்ஞாலூர் பிராமணப் பெருமக்களைச் சிறப்பித்து கூறும் போது சண்டேசுரர் புராணத்தில் சேக்கிழார் சுவாமிகள் கூறுகிறார்கள் ஐம்புலவேடர் வலைக்குள் அகப்பட்டால் ஞானநெறிகைகூடாது என்பது சுவாமிகள் கருத்தாகும் அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை ஆரிருள் உய்த்துவிடும் என்பது தெய்வப் புலவர் திருவள்ளுவரின் கருத்தாகும் தமிழகத்தில் வாழ்ந்தோர் ஐம்புல வேடரில் அகப்படாமல் அமைதியான பண்பாடுள்ள பயனுள்ள வாழ்க்கை வாழ்ந்தார்கள் விஞ்ஞானத்தின் எழுச்சியும் அதன் பெருக்கமும் அமைதியற்ற வாழ்க்கைக்கு வித்திட்டிருக்கிறது.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில்

இல, M B 4289

சின்னத்துரை கைம் பெண் அன்னலட்சுமி சாவகச்சேரி

வழக்காளி

எதிராக

1. காத்தான் சிட்ணனும் பெண்
2. பொன்னுவும் (காலஞ்சென்றவர்)

நாவற்குழி எதிராளி

3. முருகன் கந்தையா பின்சேர்க்கப்பட்ட எதிராளி

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தால் மேற்படி M B 4289-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த ஆணையின் பிரகாரம் கீழ்க்காணுமாதன இடாப்பில் விவரிக்கப்படும் ஆதனம் 1975 ஆண்டு மார்கழி மாதம் 3-ம் திகதி புதன்கிழமை முற்பகல் 11-00 மணியளவில் அக்காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

தீர்வைத்தொகை ரூபா 1900-ம் 3-7-72 தொடக்கம் 7-11-72 வரைக்கும் ரூபா 1250/ க்கு 12 வீத வட்டியும் பின் கூடிவரும தொகைக்கு 7-11-74 தொடக்கம் இறுக்கும் வரைக்கும் 5 வீத வட்டியும் செலவு தொகை ரூபா 823/-ம் (முன்னர் அறவிடப்பட்ட ரூபா 860-/ தவிர்க்கப்பட்டுள்ளது, )

### ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப் பகுதி நாவற்குழிக் கோயிற்பற்று நாவற்குழி இறை நாவிதன்பிட்டி வளவு நி. பா 5 ஐந்து பரப்புக்கும் எல்லை கிழக்கு ஒழுங்கை வடக்கு கந்தன் முருகனின் உரித்தாளருக்குரிய ஆதனம் மேற்கு ஆனையனை மருதலிங்கத்துக்குரிய ஆதனம் தெற்கு வல்லி நன்னிக்குரிய ஆதனம் இவ்வெல்லைக்குட்சேர்ந்த நிலம் வீடு அததி தென்னை வேப்பமரங்களும் மற்றைய பயிர்வகைகளும் அதைச் சேர்ந்தவைகளனைத்தும் இது யாழ்ப்பாண காணிப்பதிவகத்தில் F. 137/138 இல் பதியப்பட்டுளளது.

எஸ். வி சதாசிவம்
நீதிமன்ற வறபனவு
ஆணையாளர்

சாவகச்சேரி
2596 30

---

## பிரிவிடுதல் நொத்தீஸ்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்

1. கரணவாய் தெற்கு வல்லிபுரம மார்க்கண்டு
2, ஷை ருமன் வளத்தியா சதாசிவம்

இல. 13207- எதிராக — வாதிகள்

1, கரவெட்டி மேற்கு கணபதிப்பிள்ளை கந்தையா
2, கரணவாய் தெற்கு வீரகத்தியார் கணபதிப்பிள்ளை
3, ஷை பெண் இலட்சுமிப்பிள்ளை
4. ஷை கந்தையா செல்லையா
5. ஷை பெண் யோகேஸ்வரி
6, அல்வாய் தெற்கு கணபதிப்பிள்ளை கதிர்காமர்
7, ஷை பெண் புவனேஸ்வரி
8, ஷை சின்னத்தம்பி முருகேசு
9, ஷை பெண் பரமேஸ்வரி
10. ஷை சின்னத்தம்பி இரத்தினம்
11. ஷை வரதலட்சுமி
12, ஷை கிருஸ்ணபிள்ளை இராசேந்திரம்

— பிரதிவாதிகள்

வட மாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப்பகுத உடுப்பிட்டிக் கோயிற்பற்று கரணவாய் தெறகு இறை வெல்லன் கிராய் வயல் ஏககர் 2. 0 றூட், பேர்சசு 29 என்னும் ஆதனம் 1951 ம் ஆண்டின 16 ம் இலகப் பிரிவிடுதற் கட்டளைச் சட்டதத்திற்கமைய மேற்படி கோட்டில் மேற்படி இலக்கத்தில் ஓர் பிரிவிடுதல் வழக்குத தொடர்ந்திருக்கிறதென்று இத்தாலுமக்கறிவிக்கபபட்டிருக்கின்றது.

மேற்படி வழக்கில் பிரதிவாதிகள் மேற்படிகோட்டில் 1975ம் வருடம் ஐப்பசி மீ 31 உ 31-10-75 10 மணிக்குச் சமுகமளிக்கும்படி கட்டளை பண்ணப்பட்டிருக்கிறார்கள்,

கோட்டாரின் கட்டளைப்படி.

ஒப்பம் : த, மகேந்திரன் பதிவாளர்

1975-ம் ஆ ஐப்பசி மீ -ம் திகதி

98 24.

---

## சரஸ்வதி பூசை

யாழ்ப்பானம் வருமானவரி அலுவலகத்தில் பிரதிஆணையாளர் திரு கே தங்கராசா தலைமையில் சரஷ்வதி பூசை சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. சரஸ்வதிபூசை ஆராதனையின்பின் திரு. சி. வரதராசா அவர்களின் தேவாரபாராயணத்துடன் ஆரம்பமான இவ் விழாவில் செல்வி. சொர்ணலககுமி சுப்பிரமணியத்தின் சரஸ்வதி தோத்திரமும், இன்னிசைக் கச்சேரியும் நடைபெற்றன.

ஆலோசனைச்சபைச் செயலாளர் திரு சி சிதம்பரநாதன் அனைவருக்கும் நன்றி கூறினர்.

---

## நவராத்திரி காலப் புனித யாத்திரை வழிபாடு

சைவப் பாதுகாப்புச்சேவை இயக்குநர் கடந்த நவராத்திரி திருநாள்களில் தொல்புரம் வழக்கம்பரை ஆலய வழிபாட்டிலே சிறப்பாகப் பங்கு பற்றிப் பின் வரும ஆலயங்களிலும் தம்பணி சிறப்புற இறையருள் வேண்டி வழிபட்டனர். நயினை, சீரணி நாகபூஷணி, வண்ணை சித்தன் கேணிச் சிவன், பருளாய் மூளாய் விநாயகர்- முருகர் சித்தன்கேணி, மருதடி விநாகர், சுதுமலை அம்மன் முதலியன, மேற்படி ஆலயங்கள் நவராத்திரியின்போது மிகச் சிறப்புற்று காணப்பட்டன.

---

## வாழ்க்கையிற் சமயம்

2 ஆம் பக்க வளர்ச்சி

குச்சேவை செய்வதன் மூலம் ஆண்டவனுக்குச் சேவை செய்தனர்.

மகாத்துமா காந்தியும் மக்களுக்குச் சேவை செய்வதிற் பெருமகிழ்ச்சியடைந்தார் அவருக்குப்பிடித்த பாடல்களுள் ஒன்று வைஷ்ணவ ஜனதோ என்று தொடங்குகிறது அதனைத் தமிழில் மொழி பெயர்த்தார் கவிஞர் நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை

வைஷ்ணவன் என்போன்
யாரெனக்கேட்டபின்
வகுப்பேன் அதனைக் கேட்பீரே
பிறருடைய துன்பம் தனதெனக்
கொள்வான்
உறுதுயர் தீர்ப்பதில் வெறுப்
புக் கொள்ளான்
உண்மை வைஷ்ணவன் அவனு
கும்.

என்பது அதன் ஒருபகுதியாகும் மற்றவரின் துன்பத்தைத் தன்தெனக் கொண்டு உதவி செய்பவனும் மற்றவரின் அன்பத்தைநீக்குவதிலே தற்பெருமை கொள்ளாதவனும் உண்மை வைஷ்ணவனுவான் இது வைஷ்ணவத்துக்கு மட்டும்ல்ல எந்தச் சமயத்துக்குமே பொருந்தும்.

வழி, தருமம், (அறம்) வீட்டிலே தொடங்குகிறது என்ற பொருளில் ஆங்கிலப் பழமொழி ஒன்றுண்டு பிள்ளைகள் பெற்றோருக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்யவேண்டும் பின்னர் கிராமத்துக்கும் நாட்டுக்கும் செய்ய வேண்டியவைதச் செய்யலாம்,

---

## மரம் நாட்டுவிழா

கோம்பையன் மணல் மயானத்தில் சென்ற ஞாயிற்றுக் கிழமை பகல் முழுவதும் மரம் நாட்டுவிழாவும், குளம் தோண்டும் பணியும் நடைபெற்றன, மில்க்வைற் தாபனத்தின் ஆதரவில் ஆரம்பிக்கப் பெற்ற இப் பணியில், மயான பரிபலான சபை, சென்யோன்ஸ் அம்புலன்ஸ் சபை, திருநெல்வேலி இளம்விவசாயிகள் கழகம் ஆகியவற்றின் தொண்டர்கள் ஊக்கத்துடன் ஒத்துழைததார்கள், மில்க்வைற் தாபனததார் பலவித பயன்தரு மரங்களை நாட்டியதோடு வளவின் எல்லையெங்கும ஆயிரக்கணக்கான பனம் விதைகளையும் நாட்டினார்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### THOUGHTS TO BE TREASURED

கிரணங்கள் ஏழும் கிளர்ந்தெரி பொங்கி
கரணங்கள் விட்டுயிர் தான் எழும் போதும்
மரணங்கை வைத்துயிர் மாற்றிடும் போதும்
அரணங்கை கூட்டுவ(து) அஞ்செழுத்தாமே.

When the soul departs from the (body composed of its) elemental components and death snatches it away therefrom and glowing fire with its seven rays (or tongues) overwhelms the body),—then the refuge (of the soul which had occupied the body previously) is the five-lettered (Sri Panchaksharam,.

திருச்சிற்றம்பலம்
நமச்சிவாயவே ஞானமும் கல்வியும்
நமச்சிவாயவே நானறி விச்சையும்
நமச்சிவாயவே நாநவின் றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே.
திருச்சிற்றம்பலம்

Hindu Organ

FRIDAY, OCTOBER 24, 1975

## Here is a Hint

THE removal of the restriction on the transport of rice has immediately brought down the price of this staple food to a reasonable level. The sigh of relief of the poor man has a story to tell, a hint to be understood.

Cart loads of paddy and rice are being transported throughout the day and during night time by lorry, omnibus. train and all other available means. This free flow of this grain is such that any foreigner might be prompted to presume that recently there has been a bumper harvest.

Now a curious situation has arisen. The godowns that are packed to capacity with American flour present a peculiar problem. Purchase of flour has slowed down; a rice meal being preferred to bread. While such a situation as is obtaining at present tends to make the cost of living fall, it must be remembered that unless planned moves are put forward to prevent occasional scares of scarcity the economy of the common man cannot be satisfactorily maintained.

Administrative Authorities must now be able to analyse the problem of hoarding which has baffled them all along. Admittedly the no-restriction policy would help the availability of the necessaries of life being maintained at a normal level. Controls, permits and similar restrictive regulations always tend to the rearing of the ugly head of corruption.

Taking a hint from the present situation of free flow of rice, the Authorities must begin to formulate a fool proof scheme to make the availability of articles of food, and clothing sustained throughout the year: Scarcity is a manipulated move by the Black Market. It would be ridiculous to see people half starved while the underground go downs of the Black Market are brimful with grains.

As in the case of rice so in respect of every other article. Let this be the policy of the Government to enable the poor man live.

Administrative efficiency lies in studying problems from experience and evolving schemes that would help ease the economic position.

*Letter to the Editor.*

# Maha Shivarathri Holiday

Sir,

We should be thankful to the government for restoring the Maha Shivarathri and Deepavali holidays for the year 1976. This is partly due to the sustained agitation of the Saiva Societies and Saiva Public. The story is not yet over. According to the news item appearing in the press, this will be reviewed again, when determining the public holidays for the year 1977.

The Hindus or rather Saivaites in this country are a complacent lot What is Wesak to the Buddhists, so is Maha Shivarathri to the Hindus who follow the Saiva School of Hinduism and Vedanta school of Hinduism in this land.

If Maha Shivarathri had been made a mercantile holiday like the Wesak, the Authorities would have very much hesitated to cut the Maha Shivarathri holiday, when they reviewed the public holidays in May 1975 with a view to curtailing some of them for 1976. If one goes through calendar of holidays for 1975, one cannot fail to come to the conclusion that the Government has not touched on the mercantile and bank holidays but considered it fit to curtail the non-mercantile (public) holidays.

A progressive and socialist government discriminates between public servants and corporation and mercantile employees in matters that are purely religious. This really passes my understanding.

It is a historical fact that the late revered Sir Ponnambalam Ramanathan fought with the Colonial Government during his time to make Wesak a public holiday. If this country has a statesman of the calibre and stature of Sir P Ramanathan then that person would have advised the government to declare Maha-Shivarathri day and the day following it as mercantile holidays.

Without temporizing this question any further Hindu institutions like the Vivekananda Society, Colombo; The Jaffna Saiva Paripalana Sabhai; The All Ceylon Hindu Congress; The Ramakrisna Mission, Colombo (Ceylon Branch); The Hindu Religious Advisory Board appointed by the Ministry of Cultural Affairs; The Religious Congress of Ceylon. which has some good Hindus in it, jointly and severally should make strong representations to the Authorities concerned to declare Maha Sivarathri Day and the day following it as mercantile holidays, as from the year 1976.

This is a fair and reasonable request and a socialist democratic government cannot resist this request, if matters are represented in the right perspective.

Yours etc.
ARUL TYAGARAJAH
Vice President
(Vivekanada Society)

## Standardisation And University Admissions

Sir,

On behalf of the Council for National Unity and Welfare, the following points embodied in a memorandum were submitted to the Sectoral Committee of which the Hon. Mr. Pieter Keuneman M. P. as Chairman regarding the above subjects.

1. The main principle should be merit judged on the marks given by the examiners.

2. It has to be admitted, however, that in the circumstances obtaining in the country at the present time, certain groups of students are at a disadvantage arising from lack of adequate educational and other facilities. These groups are found in all parts of the Island including Urban areas.

3 We, therefore, humbly recommend that at least two thirds of the admission should be on merit alone and the remaining places be made available in the first instance to the students referred to in para (2) provided they attain the prescribed qualification for admission.

4. The identification of the groups referred to in para (2 and the selection of the individual students for admission from those groups should be the task of a Board consisting of competent and representative persons with wide educational interests

5. The reservation of places referred to in para (4) should be regarded as an interim measure and there should be a progressive reduction in the reservation of such places.

Yours faithfully
S. SIVASUBRAMANIAM
Honorary Secretary,
Council for National Unity and Welfare.

103/2 Hulsdorf Street,
Colombo—12

## DANCE OF SHIVA

Dr. Ananda K Coomaraswamy)

( Continued from last issue )

Another verse of Unmai Vilakkam explains the fiery arch (tiruvasi): The Panchakshara and the Dance are identified with the mystic syllable 'Om,' the arch being the kombu or hook of the ideograph of the written symbol: "The arch over Shri Nataraja is Omkara; and the akshara which is never separate from the Omkara is the contained splendor. This is the Dance of the Lord of Chidambaram."

The Tiru-Arul-Payan however (Ch. IX. 3) explains the tiruvasi more naturally as representing the dance of Nature, contrasted with Shiva's dance of wisdom.

"The dance of nature proceeds on one side: the dance of enlightenment on the other. Fix your mind in the centre of the latter."

I am indebted to Mr. Nallasvami Pillai for a commentary on this:

The first dance is the action of matter—material and individual energy. This is the arch, tiruvasi, Omkara, the dance of Kali. The other is the Dance of Shiva—the akshara inseparable from the Omkara—called ardhamatra or the fourth letter of the Pranava—Chaturtam and Turiyam. The first dance is not possible unless Shiva wills it and dances Himself.

( To be continued )

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்

Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Saiva Prakasa Press 450 K. K. S. Road Vannarponnai, Jaffna on Friday October 24, 1975.
EDITOR-IN-CHIEF R. N. SIVAPIRAKASAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org